# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 1~~54 Cr.P.C.~~) 173 BNNS
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8120331

1. District : மாவட்டம் நாமக்கல் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு நாமக்கல் | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 7/AC/2024 | Date: நாள் 27.11.2024.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018 — Sections பிரிவுகள்: 7(a), 7-A
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 — Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 25.11.2024 | Date to : நாள் வரை மாலை 16.30 மணிக்கு பின்பு

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.11.2024 | Time நேரம் : காலை 10.30 மணிக்கு

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-4 27.11.2024 | Time நேரம் : காலை 10.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 42 K.M. மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம் திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. சுபாஷினி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. முருகேசன்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.12.1988 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. S. சரவணன் (52/24). S/o சுப்பிரமணியம், வட்டார போக்குவரத்து அலுவலர் (செயலாக்கம்), ஈரோடு சரகம் / வட்டார போக்குவரத்து அலுவலர், திருச்செங்கோடு (முழு கூடுதல் பொறுப்பு) நாமக்கல் மாவட்டம் மற்றும்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: 9 நபர்கள் (விபரம் தனித்தாளில் இணைப்பு)
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91 நாள் 27.11.2024-ன் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27.11.2024-ம் தேதி 12.30 மணி

Name: பெயர் ம.சிவாஜினி.
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
உ.த.த.பிரிவு, நாமக்கல்.

**<u>நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.7/AC/2024, u/s. 7(a), 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,</u>**

**எதிரிகளின் பட்டியல்:**

1) திரு.S.சரவணன் (வயது-52/2024), த/பெ. சுப்பிரமணியம், வட்டார போக்குவரத்து அலுவலர் (செயலாக்கம்), ஈரோடு சரகம், வட்டார போக்குவரத்து அலுவலர், திருச்செங்கோடு (முழுக் கூடுதல் பொறுப்பு), நாமக்கல் மாவட்டம். (முகவரி: க.எண்.43/2, ஜோதி டாக்கீஸ்ரோடு, அம்மாபேட்டை, சேலம்).

2) திருமதி.K.பாமாபிரியா (வயது-46/2024), க/பெ. அருண் பிரசாத், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (முகவரி: க.எண்.5/1179-A, லட்சுமி நகர், பவானி, ஈரோடு மாவட்டம்)

3) திரு.R.விஷ்ணுமூர்த்தி ( வயது-59/2024) த/பெ. ராமசாமி, கதவு எண்.26 சடையன் தெரு, CHB காலனி, வேலூர் ரோடு, திருச்செங்கோடு, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

4) திரு.S.மகேந்திரன்( வயது-41/2024) த/பெ. சீரங்கன், கதவு எண்.3/167-B பழைய புளியம்பட்டி, சித்தாளந்தூர் அஞ்சல், திருச்செங்கோடு, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்

5) திரு.M.விஜி (வயது-42/2024) த/பெ. மாணிக்கம், கதவு எண்.3/129-4, ஸ்ரீ அன்னமார் நகர், மோளிப்பள்ளி அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

6) திரு.P.மகேந்திரன் (வயது-28/2024) த/பெ. பழனிச்சாமி, கதவு எண்.4/652, J.J.நகர், ஐந்துபனை, காடச்சநல்லூர் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

7) திரு.S.செந்தில்குமார் (வயது-48/2024) த/பெ. செல்லப்பன், கதவு எண்.79, R.K.கார்டன், நஞ்சனாபுரம், கதிரம்பட்டி அஞ்சல், ஈரோடு மாவட்டம்.

8) திரு.S.ஷேக்அசேன் (வயது-28/2024) த/பெ. ஷாஜகான், கதவு எண்.55, T.P.ஆறுமுகம் நகர், சீத்தாராம்பாளையம் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

9) திரு.S.சேகர் (வயது-55/2024) த/பெ. சண்முகம், கதவு எண். L154 கூட்டப்பள்ளி காலனி, திருச்செங்கோடு, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

10) திரு.A.முகமது வசீர் (வயது-32/2024) த/பெ. அப்துல் ரகுமான், டேட்டா எண்ட்ரி ஆப்ரேட்டர், பாண்டன் சாப்ட்வேர் நிறுவனம், வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம், (தற்போதைய முகவரி: கிருஷ்ணாம்பாளையம், கருங்கல்பாளையம்-அஞ்சல், ஈரோடு தாலுக்கா, ஈரோடு மாவட்டம். நிரந்தர முகவரி: கதவு எண்: 85/5, காட்டாம்புதூர், தென்னிலை ரோடு, சின்னதாரபுரம் அஞ்சல், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர் மாவட்டம்)

**<u>நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2024, u/s. 7(a), 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-12 இன் விபரம்:-</u>**

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 25.11.2024-ஆம் தேதி திங்கள்கிழமை மாலை 16.30 மணி முதல் 26.11.2024-ஆம் தேதி காலை 10.30 மணி வரை நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூட்டப்பள்ளி, வரகூராம்பட்டியில் செயல்பட்டுவரும் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 27.11.2024-ஆம் தேதி காலை 10.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 7/AC/2024, u/s. 7(a), 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 வழக்கின் விபரம் பின்வருமாறு:

25.11.2024-ஆம் தேதி நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூட்டப்பள்ளி வரகூராம்பட்டியில் செயல்பட்டு வரும் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலராகப் பணிபுரியும் திரு.S.சரவணன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–**1** ஆக பணிபுரியும் திருமதி.K.பாமாபிரியா ஆகியோர் தங்களது பதவிகளை பயன்படுத்தி அங்குள்ள தனிநபர் புரோக்கர்கள் மூலமாகவும் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை ஒட்டி வெளியில் RTO அலுவலகப் பணிகளுக்கு ஆன்லைன் சர்வீசஸ், ஜெராக்ஸ் எடுத்துக் கொடுக்கும் கடைகள் நடத்தி வரும் நபர்கள் மூலம் திருச்செங்கோடு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து புதிய வாகனப் பதிவு, தற்காலிக வாகனப்பதிவு, பழைய வாகன பதிவு புதுப்பித்தல், தகுதிச் சான்று புதுப்பித்தல், தற்காலிக ஓட்டுநர் உரிமம் வழங்குதல், புதிய ஓட்டுநர் உரிமம் வழங்குதல், உரிமம் மேற்குறிப்பு வழங்குதல், பொதுப்பணி வில்லை வழங்குதல் ஆகியவற்றிற்காக வரும் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு வசூலிப்பதாகவும், புரோக்கர்கள் அலுவலக பதிவேடுகளை கையாண்டு அந்த தொகைகளை வசூலித்து வருவதாகவும் கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் 25.11.2024–ஆம் தேதி மாலை சுமார் **16.30** மணியளவில் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்

துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் அரசு சாட்சிகள் திரு.S.P.சந்திரன், இளநிலைப் பொறியாளர், இயக்கமும் பராமரிப்பும், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், நகர் / தெற்கு / நாமக்கல், திருமதி.க.கனகலட்சுமி, மண்டல துணை வட்டாட்சியர் எண்.1, வட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர் குழுவினருடன் மேற்குபார்த்தவாறு வாயில் கொண்ட திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 25.11.2024–ஆம் தேதி திங்கள்கிழமை மாலை 16.30 மணிக்கு சென்று திடீர் சோதனை மேற்கொண்டேன். வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வெளிப்பகுதி, தரைத்தளத்தில் உள்ள வராண்டா, வட்டார போக்குவரத்து அலுவலர் அறை, மோட்டார் வாகன ஆய்வாளர் அறை, வாட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறை மற்றும் அலுவலகர்கள் அறைகளில் உள்ள அலுவலர்கள் யாரும் வெளியில் செல்லாத வகையில் காவலர்களைக் கொண்டு காப்பு போடப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ளே நுழைந்து தரைத்தளத்தில் உள்ள வராண்டாவின் தெற்கு பகுதியில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில் நுழைந்தபோது வட்டார போக்குவரத்து அலுவலர் இருக்கையில் அமரிந்திருந்த நபரிடம் நான் என்னையும் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ள வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அவரைப் பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் S.சரவணன் என்றும் தான் வட்டார போக்குவரத்து அலுவலர், (செயலாக்கம்) ஆக ஈரோடு சரகம் (ம) வட்டார போக்குவரத்து அலுவலர், திருச்செங்கோடு (மு.கூ.பொ), நாமக்கல் மாவட்டம் ஆக 09.12.2020 முதல் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில் வட்டார போக்குவரத்து அலுவலர் மேஜைக்கு எதிர் பக்கம் போடப்பட்டிருந்த இருக்கையில் ஒரு பெண் அமர்ந்திருந்தார். அவரைப்பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் K.பாமாபிரியா என்றும், தான் திருச்செங்கோடு, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1–ஆக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். அதன் பின்னர் சோதனைக்குழுவினர் சந்தேகத்தின் அடிப்படையில் வட்டாரப்போக்குவரத்து அலுவலர் அறை முழுவதும் சோதனை செய்தனர். அவரது அறையில் பணமோ பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.S.சரவணன் அவர்களிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்க முன் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 5 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும், 1 நூறு ரூபாய் நோட்டும், 1

இருபது ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் ரூ.2,620/– இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்டபோது அவர் அன்றாட செலவிற்காக கொண்டு வந்திருந்த தொகை என்றும், அந்த தொகை பற்றிய விவரங்களை திருச்சொங்கோடு வட்டாரப் போக்குவரத்து அலுவலக பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சோதனைக் குழுவினர் அலுவலக கையிருப்பு பதிவேட்டினை எடுத்து வரச்சொன்னபோது அவர் செல்வி.சி.சௌதர்ஷினி, தட்டச்சர் பொறுப்பில் இன்று இருப்பதாக கூறி அந்த பதிவேட்டை எடுத்துவரச் செய்து பார்வையிட்டதில் அந்த நோட்டின் பிரவுன் கலர் அட்டையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், திருச்சொங்கோடு, கையிருப்பு பதிவேடு 02.01.2024 முதல் என்ற தலைப்பில் இருந்தது. அந்த நோட்டில் 25.11.2024–ஆம் தேதிய பதிவுகளை பரிசீலனை செய்ததில் வரிசை எண்.9–ல் S.சரவணன், RTO எனவும், Rs.2,620/– எனவும், சொந்த செலவிற்காக என எழுதப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. எனவே அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் இன்றைய தினம் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகை குறித்து கேட்டபோது, இன்றைய தினம் அரசு கணக்கில் பணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்றும், மேலும் வரைவோலையாக ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். இது சம்பந்தமாக கணக்கர் ஆஜர்படுத்திய ரொக்கப் பதிவேடு சரிபார்க்கப்பட்டது. பின்னர் 2024 ஆம் வருடத்திற்கான அலுவலகப் பணியாளர்கள் வருகைப்பதிவேடு பற்றி கேட்டபோது, திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களின் வருகைப் பதிவேடு, வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு BONTON பணியாளர்கள் வருகைப்பதிவேடு 2024 முதல், வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, ஓட்டுநர் வருகைப் பதிவேடு 2024, வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, இரவுக் காவலர் வருகைப் பதிவேடு 2024 முதல், வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, காலதாமத வருகைப் பதிவேடு 02.01.2024 முதல், வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, அனுமதி பதிவேடு 02.01.2024 முதல் ஆகிய பதிவேடுகளை செல்வி. சி. சௌதர்ஷினி, தட்டச்சர் எடுத்து வந்து ஆஜர் செய்தார். மேற்படி வருகைப்பதிவேடுகளை பரிசீலனை செய்து அதில் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களின் வருகைப் பதிவேடு, வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு BONTON பணியாளர்கள் வருகைப்பதிவேடு–2024 முதல் ஆகிய பதிவேடுகள் விசாரணைக்காக அசலாக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் வட்டார

போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் நின்று கொண்டிருந்த நபர்களில் ஒரு நபரைப் பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் R.**விஷ்ணுமூர்த்தி** என்றும், தான் திருச்செங்கோடு, வேலூர் ரோடு சி.எச்.பி காலனி, சடையன் தெரு, கதவு எண்.26–ல் குடியிருந்து வருவதாக தெரிவித்தார். மேலும் தான் திருச்செங்கோடு, வரகூராம்பட்டி அஞ்சல், ஈரோடு ரோட்டில் ஸ்ரீகாவியா என்ற பெயரில் ஓட்டுனர் பயிற்சி பள்ளி நடத்தி வருவதாகவும், அந்த ஓட்டுனர் பயிற்சி பள்ளியை 2005–ஆம் ஆண்டு முதல் நடத்தி வருவதாகவும், இன்று தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தன்னிடம் பயிற்சி பெற்ற ஓட்டுனர்களுக்கான ஓட்டுனர் உரிமத்தின் தற்போதைய நிலை பற்றி தகவல் தெரிந்து கொள்வதற்காக வந்துள்ளதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தைகளாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதலாவதாக இருந்த கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 10 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.5,000/– இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்டபோது லைசென்ஸ் ரீடெஸ்ட்டிற்காக வைத்திருந்த தொகை என்று தெரிவித்தார். அவர் தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை **ரூ.5,000/–**மும் சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் அதில் 1 ஐநூறு ரூபாய் நோட்டு, 1 இருநூறு ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.700/– இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.R.விஷ்ணுமூர்த்தி அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன்பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் மற்றொருவரைப் பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் **எஸ்.மகேந்திரன்** என்றும், தான் திருச்செங்கோடு, சித்தாளந்தூர் அஞ்சல், பழைய புளியம்பட்டி கதவு எண்.3/167/பி–ல் தனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் தனது மனைவி கோகிலா National Insurance Company-ல் Insurance Agent-ஆக சுமார் 20 வருடங்களாக இருந்து வருவதாகவும், தனது மனைவி திருச்செங்கோடு விவேகானந்தா கல்லூரியில் System Operator-ஆக கடந்த 10 ஆண்டுகளாக பணியாற்றி வருவதாகவும், எனவே தான் அவருக்கு உதவியாக இருந்து

வருவதாகவும், தனது வாடிக்கையாளரின் வாகனத்திற்கு காப்பீட்டில் பெயர் மாற்றம் செய்வதற்காக இன்று மாலை சுமார் **4.15** மணியளவில் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் மேற்படி விவரங்களை ஆன்லைன் முறையில் பார்க்க முடியாதா என்று சோதனைக்குழுவினர் கேட்டபோது சர்வர் கனெக்ட் ஆகவில்லை என்றும் அதனால் பெயர் மாற்றம் தொடர்பான விவரங்களை நேரடியாக கேட்டுச் செல்வதற்காக வந்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தைகளாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதலாவதாக இருந்த கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் **5** ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக **ரூ.2,500/–** இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்டபோது தனது தாயாரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை **ரூ.2,500/–ம்** சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் அதில் **1** நூறு ரூபாய் நோட்டு, **1** பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.**110/–** இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.S.மகேந்திரன் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த அறையில் இருந்த நபர்களில் மற்றொருவரைப் பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் **M.விஜி** என்றும், தான் திருச்செங்கோடு, மோளிபள்ளி அஞ்சல், ஸ்ரீஅண்ணமார் நகர், கதவு எண். **3/129–4**–ல் தனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் தான் திருச்செங்கோடு புது பஸ்டாண்ட் ரவுண்டானா அருகில் உள்ள பழைய கரூர் வைஸ்யா வங்கிக்கு எதிரில் உள்ள ஸ்ரீமுருகன் ஒட்டுனர் பயிற்சி பள்ளியில் **2018**–ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருவதாகவும், மாத சம்பளமாக ரூ.5,000/– கொடுப்பார்கள் என்றும் தெரிவித்தார். மேலும் வாகனங்களுக்கு பிட்னஸ் சர்ட்டிபிகேட் வாங்க வாகனங்களை ஓட்டிவருவது, லைசென்ஸ் எடுக்க டெஸ்ட்டுக்கு வாகனங்கள் ஓட்டிவருபவர்கள் தொடர்புடைய பேப்பர்களை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கொடுத்துச் செல்லும் வேலைகள் செய்து வருவதாகவும் அதற்காக இன்று மாலை சுமார் **3.30** மணியளவில்

திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தைகளாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதலாவதாக இருந்த கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் **32** ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.**16,000/–** இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது TN 34 AJ 6608 என்ற வாகத்திற்கு National Permit Tax கட்டுவதற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை **ரூ.16,000/–ம்** சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் **6** இருநூறு ரூபாய் நோட்டுக்கள், **1** இருபது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.**1,220/–** இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.**M.**விஜி அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த அறையில் இருந்த நபர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **பி.மகேந்திரன்** என்றும், தான் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் தாலுக்கா, காடச்சநல்லூர் அஞ்சல், ஐந்து பனை, ஜே.ஜே.நகர், கதவு எண்.**4/652–**ல் தனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். தான் **9–**ஆம் வகுப்புவரை படித்துள்ளதாகவும், தற்போது கட்டிட வேலைக்கு சென்று வருவதாகவும், தினசரி ரூ.**700/–** கூலியாக பெற்றுவருவதாகவும் தெரிவித்தார். மேலும் விபத்தில் சிக்கியிருந்த தனது பேசன் புரோ என்ற வாகனத்திற்கு சான்று வாங்க வந்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தைகளாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதலாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் **14** ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.**7,000/–** இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது ஆஸ்பத்திரி செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை **ரூ.7,000/–ம்** சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில்

எண்ணிப்பார்த்தபோது அதில் **3** நூறு ரூபாய் நோட்டுக்கள், **2** பத்து ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.**320/–** இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.P.மகேந்திரன் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த அறையில் இருந்த நபர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **S.செந்தில்குமார்** என்றும், தான் ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுக்கா, கதிரம்பட்டி அஞ்சல், நஞ்சனாபுரம், ஆர்.கே. கார்டன், கதவு எண்.**79**–ல் தனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். தான் டிப்ளமோ படித்துள்ளதாகவும், தான் தற்போது திருச்செங்கோடு ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் புரோக்கர் வேலை பார்த்து வருவதாகவும், இன்சூரன்ஸ் ஏஜெண்டாகவும் உள்ளதாக தெரிவித்தார். இன்று திருச்செங்கோடு ஆர்.டி.ஓ அலுவலகத்திற்கு FCI Slip வாங்க மாலை சுமார் **4.00** மணியளவில் வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தைகளாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதலாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் **6** ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், **2** இருநூறு ரூபாய் நோட்டுக்கள்,**1** நூறு ரூபாய் நோட்டு ஆக ரூ.**3,500/–** இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அப்பாவிற்கு மாத்திரை வாங்குவதற்காகவும், இன்சூரன்ஸ் பிரிமீயம் கட்டுவதற்காகவும் வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை **ரூ.3,500/–ம்** சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் **1** இருநூறு ரூபாய் நோட்டு, **2** நூறு ரூபாய் நோட்டுக்கள், **3** ஐம்பது ரூபாய் நோட்டுக்கள், **2** இருபது ரூபாய் நோட்டுக்கள், **3** பத்து ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.**620/–** இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.**S.**செந்தில்குமார் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த அறையில் இருந்த நபர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **S.ஷேக் அசேன்** என்றும், தான் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, சீத்தாராமபாளையம் அஞ்சல், டி.பி. ஆறுமுகம் நகர்,

கதவு எண்.55ல் தனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். தான் பி.ஏ. ஆங்கிலம் படித்துள்ளதாகவும், தான் தற்போது திருச்செங்கோட்டில் Friends Driving School-ல் வேலை செய்தாக தெரிவித்தார். மேலும் இன்று திருச்செங்கோடு ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு ஓட்டுநர் பயிற்சிக்கு 8 போட்டு பழகுவதற்காக பயிற்சி பெறுபவரை மாலை சுமார் 4.00 மணியளவில் அழைத்து வந்திருந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தைகளாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதலாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது 10 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.5,000/– இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தனது மனைவியின் மருத்துவ செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை **ரூ.5,000/–ம்** சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் இரண்டாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் அதில் 2 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.400/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.S.ஷேக் அசேன் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த அறையில் இருந்த நபர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **S.சேகர்** என்றும், தான் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, கூட்டப்பள்ளி காலனி அஞ்சல், கதவு எண்.எல்.154 ல் தனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். தான் பி.எஸ்.சி. படித்துள்ளதாகவும், தற்போது திருச்செங்கோடு ஆர்.டி.ஓ அலுவலகத்தில் புரோக்கர் வேலை பார்த்து வருவதாகவும், தான் 2013 வரை ஜே.எஸ் கன்சல்டிங் என்ற பெயரில் ஆர்.டி.ஓ அலுவலக வேலைகளை செய்து வந்ததாகவும், தற்பொழுது அலுவலகம் எதுவும் இல்லாமல் கிடைக்கும் வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். இன்று திருச்செங்கோடு ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு ராயல் பஸ் சர்வீஸ் என்ற பேருந்தை பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக விவரங்கள் கேட்பதற்காக மதியம் சுமார் 3.00 மணியளவில் வந்திருந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்ட்டின் வலது பக்க பின்பக்கத்தில் உள்ள பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தைகளாக எடுத்து

ஆஜர் செய்தார். அதில் முதலாவது கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது 3 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.1,500/– இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் பத்திரம் வாங்கியது போக மீதி தொகை என்றும் தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை **ரூ.1,500/–ம்** சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது மடிப்பில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் அதில் 1 இருபது ரூபாய் நோட்டு ஆக ரூ.20/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது அது தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.S.சேகர் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த நபர்களில் ஒரு நபரைப் பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் R.**கண்ணன்** என்றும், தான் திருச்செங்கோடு, ராஜாகவுண்டன்பாளையம், டி.சி.எஸ் நகர், கதவு எண்.114/இ, புதிய எண்.29 குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். தான் திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலூக்காவில் உள்ள அசோக் லைலேண்ட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட டீலரான Pandiyan Automotive Pvt. Ltd ல் மேலாண்மை இயக்குநராக பணியாற்றி வருவதாகவும், இன்று தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தங்களது நிறுவனத்தில் பணிபுரியும் ஆட்களை பழனியில் இருந்து கம்பெனிக்கு அழைத்துச் செல்வதற்கு TATA Winger வாகனம் வாங்குவதற்காக மேற்படி வாகனத்தை Own Board-ல் இருந்து Yellow Board-க்கு மாற்ற இயலுமா என்ற சந்தேகத்தை கேட்டுச் செல்வதற்காக வந்திருந்ததாக கூறினார். அவரிடம் அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் தனது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 3 ஐநூறு ரூபாய் நோட்டுக்களும், 1 இருநூறு ரூபாய் நோட்டும், 1 நூறு ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் ரூ.1,800/– இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்டபோது அதில் ரூ.1,000/– ம் அவர் வாகனம் வாங்குவதற்கு முன்பணம் கொடுக்க வைத்திருந்ததாகவும், மீதி ரூ.800/– டீசல் பிடிப்பதற்காகவும் வைத்திருந்ததாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.1,800/–ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர் அந்த அறையில் இருந்த நபர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் பொன்னுசாமி என்றும், தான் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, எலச்சிபாளையம் அஞ்சல், ஓலப்பாளையம் காலனி, அகரம் கிராமம், காந்தி நகர் கதவு எண்.5/22 தனது குடும்பத்தினருடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். தான் 10 ஆம் வகுப்புவரை படித்துள்ளதாகவும், தான் தெருகூத்து ஆடி வருவதாகவும் தெரிவித்தார். இன்று திருச்செங்கோடு ஆர். டி. ஓ அலுவலகத்திற்கு TATA Winger வாகனத்தை விற்பது தொடர்பாக மாலை சுமார் 4.00 மணியளவில் வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது இடது பக்க அண்டர்வேரில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 4 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 இருபது ரூபாய் நோட்டு ஆக ரூ.2,070/ இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தனக்கு சுகர் மற்றும் பிரசர் மாத்திரைகள் வாங்குவதற்காகவும், வைத்துள்ளதாக தெரிவித்த காரணத்தை ஏற்றுக்கொண்டு அந்த பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் யுவராஜ் என்றும், தான் சேலம், தாதகாப்பட்டி, வசந்தம் நகர் கதவு எண். 220ல் தனது பெற்றோருடன் வசித்து வருவதாக தெரிவித்தார். தான் சேலத்தில் ஜேஸ்மைன் என்ற பெயரில் பார்சல் அலுவலம் நடத்தி வருவதாகவும், இன்று தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தனது நான்கு சக்கர வாகனம் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக வந்திருந்ததாக கூறினார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 2 இருநூறு ரூபாய் நோட்டுக்கள், 1 நூறு ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் ரூ.1,500/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.1,500/– ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் அஜய்குமார் யுவராஜ் என்றும், தான் திருச்செங்கோடு,

இறையமங்களம் அஞ்சல், ஏ.இறையமங்கலம், கதவு எண். 5/174– ல் தனது பெற்றோருடன் வசித்து வருவதாக தெரிவித்தார். தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் Bontan Software Technical Assistant-ஆக கடந்த ஒரு ஆண்டாக பணியாற்றி வருவதாகவும், தனது மாத சம்பளம் ரூ.10,000/– என்றும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து 1 ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து ஆஜர் செய்தார். அதுபற்றி அவரிடம் கேட்டபோது தனது இருசக்கர வாகனம் சர்வீஸ் செய்வதற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.500/–ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் அரவிந்த் என்றும், தான் திருச்செங்கோடு, குமரேசபுரம், 6வது தெரு, ராஜீவ் நகர், கதவு எண்.22–ல் தனது பெற்றோருடன் வசித்து வருவதாக தெரிவித்தார். தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு இன்று Duplicate RC வாங்க TN 34 AF 7306 என்ற வாகனத்தை டெஸ்ட் காட்டுவதற்காக வந்திருந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து 2 இருபது ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 1 பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.50/–யை எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.50/– ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் கார்த்திக் என்றும், தான் திருச்செங்கோடு, சூரியம்பாளையம் அஞ்சல், வெள்ளாளப்பட்டி, கதவு எண். 126–ல் குடியிருந்து வருவதாகவும், தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு இன்று National Permit Tax கட்ட வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்கத்தில் இருந்து 1 ஐநூறு ரூபாய் நோட்டு, 1 நூறு ரூபாய் நோட்டு, 2 ஐம்பது ரூபாய் நோட்டுகள், 3 இருபது ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 1 பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.770/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதுபற்றி அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம்

ரூ.770/–ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் சஞ்சய் என்றும், தான் திருச்செங்கோடு, சித்தாளந்தூர் அஞ்சல், கருங்கல்பட்டி, கதவு எண். 7/89–B-ல் தனது பெற்றோருடன் குடியிருந்து வருவதாகவும், தான் திருச்செங்கோடு சரவணா டிரைவிங் ஸ்கூலில் மாதம் ரூ.8,000/– சம்பளத்தில் வேலை செய்து வருவதாகவும், வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு இன்று FC Slip எடுப்பதற்காக வந்துள்ளதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது பக்கத்தில் இருந்து 4 இருநூறு ரூபாய் நோட்டுகள், 1 நூறு ரூபாய் நோட்டு, ஐம்பது ரூபாய் நோட்டு, ஆக மொத்தம் ரூ. 950/–யை எடுத்து ஆஜர் செய்தார். அதுபற்றி அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.950/–ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் நாகராஜ் என்றும், தான் திருச்செங்கோடு, கரிவேப்பம்பட்டி அஞ்சல், திருநகர் காலனி, கதவு எண். 3/49பி–ல் தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், தான் திருச்செங்கோடு சங்ககிரி ரோட்டில் விக்னேஷ் டிரைவிங் ஸ்கூல் வைத்துள்ளதாகவும், வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு இன்று Licence Edit செய்வதற்காக வந்துள்ளதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது சர்டின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து 2 ஐநூறு ரூபாய் நோட்டுகள், 1 நூறு ரூபாய் நோட்டு, மொத்தம் ரூ. 1,100/–யை எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.1,100/– ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வெளியில் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் கண்ணன் என்றும், தான் திருச்செங்கோடு, வரகூராம்பட்டி அஞ்சல், வித்யா விகாஷ் பின்புறம், குமரன் நகர், கதவு எண்.300–ல் தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலரின் ஜீப் TN 28 AG 5555 ஓட்டுனராக 12.08.2021–ஆம் தேதி முதல் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர்

தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறினார். அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு கிழக்கு பக்கம் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் சுந்தர் சேகர் என்றும், தான் திருச்செங்கோடு, கூட்டப்பள்ளி காலனி, குடித்தெரு, பிருந்தாவன் நகர் கதவு எண். 5/22 ல் தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமத்திற்கு போட்டோ எடுக்கும் வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது பக்கம் பாக்கெட்டில் இருந்து தொகையை ஒரு கட்டாக எடுத்து ஆஜர்படுத்தினார். அதில் 1 நூறு ரூபாய் நோட்டு, 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 இருபது ஐம்பது ரூபாய் நோட்டு, 1 பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ. 180/–யை எடுத்து ஆஜர் செய்தார். அதுபற்றி அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.180/–ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வடக்கு பக்கம் இருந்த அறையில் இருந்த நபர்களில் ஒரு நபரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் சீனிவாசன் என்றும், தான் திருச்செங்கோடு, அனிமூர் அஞ்சல், கொல்லப்பட்டி காலனி, கதவு எண்.டி/106 ல் தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், தான் திருச்செங்கோடு பள்ளிபாளையம் ரோட்டில் ஸ்ரீவெங்கடேஷ்வரா வாகன புகை பரிசோதனை நிலையத்தை நடத்தி வருதாகவும், தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் இடது பக்கம் பாக்கெட்டில் இருந்து 1 ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து ஆஜர்படுத்தினார். அதுபற்றி அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.500/– ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு மேற்கு பக்கம் உள்ள செக்சன் அலுவலகத்தில் இருந்த நபர்களில் ஒருவரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ஜோதிபிரகாஷ் என்றும், தான் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தாலுக்கா, சீராப்பள்ளி அஞ்சல், குளத்துப்பாளையம், கதவு எண். 2/39 ஏ தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 3.10.2023–ஆம் தேதி முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகைபற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது

பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 1 ஐநூறுரூபாய் நோட்டு, 1 இருநூறு ரூபாய் நோட்டு, 1 நூறு ரூபாய் நோட்டு, 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 இருபது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.870/– இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த பணம் என்றும், தான் காலையில் அலுவலகம் வந்தபோது வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, கையிருப்பு பதிவேடு 02.01.2024 முதல் என உள்ள ஆவணத்தில் 25.11.2024–ஆம் தேதி வரிசை எண்.1 படி பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும தெரிவித்தார். எனவே அந்த தொகை ரூ.870/–ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வடக்கு பக்கம் இருந்த அறையில் இருந்தவர்களில் ஒருவரை அழைத்து விசாரித்தபோது அவர் பெயர் சண்முகம் என்றும், தான் திருச்செங்கோடு, இராஜாகவுண்டன்பாளையம், கதவு எண். 67 பி–ல் தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு விபத்தில் சிக்கிய ஆட்டோவிற்கு சான்று வாங்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது வலது பக்க அன்டர்வேர் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 29 நூறு ரூபாய் நோட்டுகள், 1 இருபது ரூபாய் நோட்டு, 4 பத்து ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.2,960/– இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த பணம் என்றும், தான் இன்சூரன்ஸ் காலாவதியானதால் அதற்கு கட்டுவதற்காக வைத்திருந்ததாக கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.2,960/– ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வடக்கு பக்கம் இருந்த அறையில் இருந்தவர்களில் ஒருவரை அழைத்து விசாரித்தபோது அவர் தனது பெயர் சசிகுமார் என்றும், தான் ஒரு எக்ஸ் சர்வீஸ் மேன் என்றும், தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலரின் வாகன ஒட்டுனராக கடந்த 13 மாதங்களாக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 2 நூறு ரூபாய் நோட்டுகள், 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 இருபது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.270/– இருந்தது. அந்த பணம் பற்றி

அவரிடம் கேட்டபோது அவர் தனது கைச்செலவுக்கு வைத்திருப்பதாக கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.270/—ம் சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறைக்கு வடகிழக்கில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நபரைப்பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் சூர்யா என்றும் தான் ஈரோடு மாவட்டம், நம்பியூர் தாலூகா, குமார்காளிபாளையம், கதவு எண்.105ல் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 09.09.2024—ஆம் தேதி முதல் உதவியாளராக பணியில் சேர்ந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்த்தபோது அதில் 3 நூறு ரூபாய் நோட்டுகள், 1 இருபது ரூபாய் நோட்டு மற்றும் 5 பத்து ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.370/— இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த பணம் என்றும், பஸ் டிக்கட் எடுக்க வைத்திருந்ததாகவும், தான் காலையில் அலுவலகம் வந்தபோது வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, கையிருப்பு பதிவேடு 02.01.2024 முதல் என உள்ள ஆவணத்தில் 25.11.2024—ஆம் தேதி வரிசை எண்.3படி பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மதிய உணவு செலவு போக மீதி ரூ.370/— உள்ளது என்றும் தெவித்தார். எனவே அந்த தொகை ரூ.370/—ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்கு கிழக்கில் வெளிப்பக்கமாக செல்ல உள்ள பாதைக்கு மேற்காக உள்ள அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த அறையின் தெற்கு பக்க சுவர் ஓரமாக வடக்கு பார்த்தவாறு இருந்து ஒரு பச்சை கலர் பீரோவை சோதனை செய்தபோது அதில் பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் அந்த பிரோவிற்கும் சுவற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் சோதனை செய்த போது அங்கு ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அந்த நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ஒரு ஐநூறு ரூபாய் நோட்டும், 1 நூறு ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் **ரூ.600/—** காணப்பட்டது. அந்த கேட்பாறற்று கிடந்த தொகை ரூ.600/—ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் அந்த அறை முழுவதும் சோதனை செய்தபோது வேறு பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன் பின்னர் அந்த அறைக்கு தெற்கில் உள்ள கழிவறைகளில் சோதனை மேற்கொண்டபோது வேறு பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன்

பின்னர் அந்த அறைக்கும் மேற்கில் உள்ள அறை இரண்டு தடுப்புகளாக பிரிக்கப்பட்டிருந்த BONTON அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த இரண்டு அறைகளில் தெற்கு அறையில் பணியில் இருந்து நபர்களில் முதலாவதாக இருந்து நபரைப் பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் **முகமது வசீர்** என்றும், தனது சொந்த ஊர் கரூர் மாவட்டம் சின்னதாராபுரம், தென்னிலை ரோடு, காட்டாம்புதூர் கதவு எண்.**85/5** என்றும், தற்பொழுது ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுக்கா, கிருஷ்ணாம்பாளையத்தில் தனது மனைவியுடன் குடியிருந்து வருவதாகவும் மேலும் அவர் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் **2023** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் BONTON Data Entry Operator ஆக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தன்னிடம் தொகை எதுவும் இல்லை என்று தெரிவித்தார். அவரது இருக்கையை சோதனை செய்தபோது பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் அவரது இருக்கை அமைந்துள்ள இடத்திற்கு சுற்றிலும் சோதனை செய்தபோது அவரது இருக்கைக்கும், அதை ஒட்டியவாறு மேற்கு புறத்தில் உள்ள சுவருக்கும் இடைப்பட்ட பகுதியில் தரையில் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலமாக எண்ணிப்பார்த்தபோது அதில் **6** ஐநூறு ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ரூ.**3,000/–** காணப்பட்டது. அதுபற்றி முகமது வசீரிடம் விசாரித்தபோது தனக்கு அந்த தொகை அங்கு எவ்வாறு வந்தது என்று தெரியவில்லை என்று கூறினார். மேலும் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோரிடம் அந்த தொகை பற்றி சோதனைக்குழுவினர் விசாரித்தபோது அவர்களும் அந்த தொகை ரூ.**3,000/–** அங்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை என்று கூறினர். அந்த கேட்பாறற்று கிடந்த தொகை **ரூ.3,000/–** விசாரணைக்காக கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. பின்னர் போட்டோ எடுக்கும் அறையில் சோதனை மேற்கொண்டபோது அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன் பின்னர் BONTON அறைக்கும் மேற்கு பக்கமாக உள்ள பணியாளர்கள் ஓய்வு அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த அறையின் வடமேற்கு மூலையில் உள்ள டேபில், மேற்கு சுவர் ஓரமாக உள்ள பீரோக்கள் ஆகியவைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன் பின்னர் அந்த அறையின் தெற்கு பக்க சுவர் ஓரமாக இரண்டடி உயரம் கொண்ட இரண்டு மரப்பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தது. அந்த மரப்பெட்டிகளில் சோதனை மேற்கொண்டபோது அதில் பணமோ பொருளோ காணப்படவில்லை. அந்த இரண்டு மரப்பெட்டிகளுக்கு மேற்கு பக்கமாக இருந்த மரப்பெட்டியை ஒட்டியவாறு சுவற்றில்

ஓரமாக தரையில் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலாக எண்ணிப்பார்த்தபோது அதில் முதலாவது மடிப்பில் 3 இருநூறு ரூபாய் நோட்டுக்கள், 2 நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.800/–ம், இரண்டாவது மடிப்பில் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.1,000/–மும், மூன்றாவது மடிப்பில் 4 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.2,000/–மும் ஆக மொத்தம் மூன்று மடிப்புகளிலும் சேர்ந்து ரூ.3,800/– காணப்பட்டது. அந்த தொகை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோரிடம் சோதனைக்குழுவினர் விசாரித்தபோது அவர்களும் அந்த தொகை ரூ.3,800/– அங்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை என்று கூறினர். அந்த கேட்பாரற்று கிடந்த தொகை **ரூ.3,800/–** விசாரணைக்காக கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. பின்னர் அந்த அறையின் தெற்கு பக்க சுவர் ஓரமாக கிழக்கில் வைக்கப்பட்டிருந்த மற்றொரு மரப்பெட்டியின் மேல் வைக்கப்பட்டிருந்த LOG BOOK PART I. RTO-THIRUCHENGODE TN 28-AG 5555 என்ற ஆவணத்தை சோதனை செய்தபோது அதன் மத்தியில் ரூபாய் நோட்டுக்கள் கற்றையாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலமாக எண்ணிப் பார்த்தபோது அதில் 6 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.3,000/– காணப்பட்டது. அதுபற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோரிடம் சோதனைக்குழுவினர் விசாரித்தபோது அவர்களும் அந்த தொகை ரூ.3,000/– அங்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை என்று கூறினர். அந்த கேட்பாரற்று கிடந்த தொகை **ரூ.3,000/–** விசாரணைக்காக கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலக வளாகத்தில் நான்கு இடங்களில் கேட்பாரற்று கிடந்த தொகை மொத்தம் ரூ.10,400/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது தொடர்பாக வட்டார போக்குவரத்து அலுவலர் பொறுப்பு திரு.S.சரவணன் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்கு வடகிழக்கில் உள்ள மோட்டார் ஆய்வாளர் அலுவலக அறையில் சோதனை செய்தபோது பணமோ பொருளோ எதுவும் காணப்படவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 திருமதி. பாமாபிரியா அவர்கள் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது அவர் தன்னிடம் தொகை எதுவும் இல்லை என்று கூறினார். மேலும் அவர் இன்று காலை அலுவலகம் வந்தபோது ரூ.2,500/– கொண்டு வந்ததாகவும், அதை பணஇருப்பு பதிவேட்டில் பதிந்ததாகவும், அதன் பிறகு மருந்துகள் வாங்கியதற்கு அந்த தொகையை செலவழித்து விட்டதாகவும் தெரிவித்தார். பின்னர் பண இருப்பு பதிவேட்டை

பரிசீலனை செய்ததில் 25.11.2024 ஆம் தேதி வரிசை எண்.8–படி ரூ.2,500/– கொண்டு வந்திருந்தது தொடர்பாக பதிவுகள் உள்ளது. பிறகு வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்திற்கு மேற்கு பக்கமாக உள்ள அறைகளில் சோதனை செய்தபோது பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. அந்த அறைகளில் பணியாற்றிக் கொண்டிருந்த உதவியாளர் திரு.அ.வினோத், கண்காணிப்பாளர் திரு.கே.சக்திவேல், தட்டச்சர் செல்வி.சி.சௌதர்ஷினி, உதவியாளர் திருமதி.செ.விஜயலட்சுமி, உதவியாளர் திருமதி.சி.உமா, இளநிலை உதவியாளர் திருமதி.மு.கயல்விழி, இளநிலை உதவியாளர் திரு.ஜோதிபிரகாஷ், உதவியாளர் திரு.சூர்யா ஆகியோர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது அவர்களிடம் பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன்பிறகு அலுவலகத்திற்கு முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த TN 33 AG 8888 மற்றும் TN 28 AG 5555 ஆகிய வாகனங்களில் சோதனைக் குழுவினர் அலுவலக விளக்கு வெளிச்சத்தில் சோதனை மேற்கொண்டபோது பணமோ பொருளோ காணப்படவில்லை. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 திருமதி. பாமாபிரியா அவர்களுக்குச் சொந்தமான ~~TN 34 K 8000~~ TN 37 CK 7770 என்ற Suzuki ~~Access 125~~ Dzire என்ற வெள்ளை நிற காரை அலுவலக விளக்கு வெளிச்சத்தில் சோதனை செய்தபோது அந்த காரின் பின்பக்க சீட்டில் வைக்கப்பட்டிருந்த ஒரு நீலநிற காயத்திரி என்று பெயர் உள்ள கட்டை பையில் துணிகளுக்கு நடுவில் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அதில் எவ்வளவு தொகை உள்ளது என்று திருமதி. பாமாபிரியா அவர்களிடம் கேட்டபோது அவரால் அதில் எவ்வளவு தொகை உள்ளது என்று கூற இயலவில்லை. பின்னர் அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் மூலமாக எண்ணிப் பார்த்தபோது அதில் நான்கு மடிப்புகளாக தொகை இருந்தது. அதில் முதலாவது மடிப்பில் 3 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.1,500/–மும், இரண்டாவது மடிப்பில் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.1,000/–மும், 2 நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.1,200/– ம், மூன்றாவது மடிப்பில் 1 ஐநூறு ரூபாய் நோட்டு ஆக ரூ.500/–ம், 1 இருநூறு ரூபாய் நோட்டு ரூ.200/–ம், 1 ஐம்பது ரூபாய் நோட்டு ஆக ரூ.50/– ம், ஆக மொத்தம் ரூ.750/–ம், நான்காவது மடிப்பில் 12 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.6,000/–மும், ஆக மொத்தம் அந்த காரில் மொத்தம் ரூ.9,450/– இருந்தது. அந்த தொகை பற்றி திருமதி. பாமாபிரியா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 அவர்களிடம் விசாரணை செய்தபோது அவர் தான் ஊருக்குச் சென்று வந்ததாகவும், அப்போது தனது அம்மா தொகை கொடுத்தார்கள் என்றும் அந்த தொகையை தான் தனது காரில் வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்படாமல் அந்த தொகை ரூ.9,450/–ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது

தொடர்பாக திருமதி. பாமாபிரியா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் சந்தேகத்தின்பேரில் வட்டார போக்குவரத்து அலுவலக நுழைவு வாயிலுக்கு சற்று மேற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனம் TN 47 BX 8624 JMT Sport Power என்ற மாடல் Electrical Vehicle யாருடையது என்று சோதனைக் குழுவினர் விசாரணை செய்தபோது அந்த இரு சக்கர வாகனமானது திரு.**A.**முகமது வசீருக்குச் சொந்தமானது என்று தெரியவந்தது. அந்த இரு சக்கர வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அந்த இருசக்கர வாகனத்தின் சீட்டிற்கு அடிப்பகுதியில் G. Shankar, 98427 06476, Back lock and renewall 25/11/24, Viswam என சிகப்பு கலர் பேனாவால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு காக்கி நிற கவரில் ரூபாய் நோட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த காக்கி நிற கவரில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் மூன்று மடிப்புகளாக தொகை காணப்பட்டது. முதலாவது மடிப்பில் இருந்து தொகையை எண்ணிப்பார்த்தபோது அதில் 49 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் **ரூ.24,500/–** இருந்தது. இந்த தொகையானது 25.11.24 என ஆரம்பிக்கப்பட்டு 2,150 என எழுதி முடிக்கப்பட்ட துண்டு சீட்டில் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. அந்த துண்டு சீட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இரண்டாவது மடிப்பில் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 4 நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் **ரூ.1,400/–** இருந்தது. இந்த தொகையானது 25.11.24 Viswam 9+280=2520 என எழுதி முடிக்கப்பட்ட துண்டு சீட்டில் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. அந்த துண்டு சீட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மூன்றாவது மடிப்பில் 13 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 1 இருநூறு ரூபாய் நோட்டு, 1 ஐம்பது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் **ரூ.6,750/–**இருந்தது. இந்த தொகையானது 25/11/24 KH-5X280=1400 என ஆரம்பிக்கப்பட்டு DL – 1X100=100, 6,740/- என பேனாவால் எழுதப்பட்டு முடிக்கப்பட்ட சிறிய துண்டு பேப்பரில் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. அந்த துண்டு பேப்பர் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. மேலும் மற்றொரு மஞ்சள் கலர் Sagar, Women kurti, salwar, sarees, lehenga, Inners, 70, rkv road, Erode 638001, போன் எண். 6382923990 என பச்சைகலர் பிரிண்ட் செய்யப்பட்டும், மற்றொருபுறம் 62, rkv road, Erode 638001, போன் எண். 0424 2213578 Sagar, Kids – Mens என பச்சைகலர் பிரிண்ட் செய்யப்பட்டுள்ள மஞ்சள் கலர் பிளாஸ்டிக் பையில் 8 கட்டுக்களாக காணப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு இருந்தது:

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்கள் விவரம் | தொகை | தொகை சுற்றி வைக்கப்பட்டிருந்த துண்டு பேப்பர் விவரம். |
|---|---|---|---|
| 1. | ரூ.500 X 20 | 10,000/– | |
| 2. | ரூ.500 X 35 | 17,500/– | M/c F25 – 300 என ஆரம்பிக்கப்பட்டு **18,350/–** என முடிக்கப்பட்டுள்ள வெள்ளை கலர் துண்டு பேப்பர். விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. |
| 3. | ரூ.500 X 4 | 2,000/– | |
| 4. | ரூ.500 X 4 | 2,000/– | |
| 5. | ரூ.500 X 3 | 1,500/– | |
| 6. | ரூ.500 X 2<br>ரூ.100 X3 | 1,300/– | |
| 7. | ரூ.200 X 1 | 200/– | |
| 8. | ரூ.200 X10<br>ரூ.100 X20 | 4,000/– | |
| | | **38,500/–** | |

மேற்படி தொகைகள் பற்றி திரு.**A.**முகமது வசீரிடம் கேட்டபோது திருச்செங்கோடு சுற்றுப்பகுதியில் உள்ள இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கரம் ஷோரூம்களில் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கென புரோக்கர்கள் மூலமாக 25.11.2024–ஆம் தேதியன்று கொடுக்கப்பட்ட தொகையாகும் என்றும், தான் அந்த பணத்தை ஒவ்வொருவரிடமிருந்து பெற்று வைத்துள்ளதாகவும், மாலையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. பாமாபிரியா அவர்கள் வீட்டிற்கு செல்லும்போது அலுவலகத்திற்கு வெளியில் ஏதாவது ஒரு இடத்திற்கு என்னை வரச்சொல்வார் என்றும், நான் அங்கு சென்றால் அவர் என்னிடம் கொடுக்கப்பட்டிருந்த அனைத்து தொகையையும் பெற்றுக் கொள்வார் என்றும் தெரிவித்தார். அதன் பின்னர் திரு.முகமது வசீரின் இருசக்கர வாகனம் நின்ற இடத்திற்கும் சற்று மேற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனம் TN 34 K 8000 Suzuki Access என்ற வாகனம் யாருடையது என்று சோதனைக் குழுவினர் விசாரணை செய்தபோது அந்த இரு சக்கர வாகனமானது **திரு.சேகர்** என்பவருக்குச் சொந்தமானது என்று தெரியவந்தது. அந்த இரு சக்கர வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அந்த இருசக்கர வாகனத்தின் சீட்டிற்கு அடிப்பகுதியில் Lalitha Jewellery Mart P Ltd., Tamil Nadu, Puducheri என்ற பெயர் பொறிக்கப்பட்ட கிரே கலர் மணிபர்சில்

ரூபாய் நோட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த மணிபர்சில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எடுத்து எண்ணிப்பார்தபோது அதில் இரண்டு மடிப்புகளாக ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. முதலாவது மடிப்பில் இருந்து தொகையை எண்ணிப் பார்த்தபோது அதில் **10** ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், **15** இறுநூறு ரூபாய் நோட்டுக்க, **5** நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.**8,500/–** இருந்தது. மேலும் Prasanna Automobilies Pvt. Ltd என்ற பெயர் பொறிக்கப்பட்ட வெள்ளை நிற கவரில் இருந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எடுத்து எண்ணிப்பார்தத போது அதில் **5** ஐறுநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.**2,500/–** இருந்தது. மேற்படி இரண்டு தொகையும் சேர்த்து **ரூ.11,000/–** இருந்தது பற்றி திரு.சேகரிடம் விசாரணை மேற்கொண்டபோது மருந்து வாங்குவதற்கு வைத்திருந்ததாகவும், சொந்த செலவிற்கு வைத்திருந்ததாகவும் தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்படாமல் அந்த தொகை **ரூ.11,000/–**ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கண்காணிப்பாளர் ‘இ’ பிரிவு அறையின் தெற்கு பக்க சுவரில் உள்ள ஜன்னலின் வெளிப்பக்கத்தில் ஒரு SAMSUNG போன் இருந்தது. அதுபற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் விசாரித்தபோது அது தன்னுடைய போன் என்றும் SAMSUNG Galaxy J7 Prime Model என்றும் அந்த போனில் **9865236789** என்ற ஏர்டெல் சிம்கார்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார். அவருடைய போனில் இருந்து ஸ்கிரீன் சாட் எடுக்கப்பட்டு அதை பிரிண்ட் எடுக்கப்பட்ட **12** தாள்களில் நானும், வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அரசு சாட்சிகள் கையொப்பம் செய்தனர். அந்த பக்கங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதேபோல் திரு.பூபதி **(24** பக்கம்) மற்றும் திரு.முகமது வசீர் **(42** பக்கம்) ஆகியோரின் மொபைல் போன்களில் இருந்து ஸ்கிரீன் சாட் எடுக்கப்பட்டு அதை பிரிண்ட் எடுக்கப்பட்டு நானும் அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அந்த பக்கங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.பூபதி என்பவரின் மொபைல் போனில் இருந்து டெலீட் செய்யப்பட்ட விவரங்கள் மீண்டும் ரெக்கவரி செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டதை **(86** பக்கங்கள்) நானும் அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அந்த பக்கங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக திரு. பூபதி அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஏஜெண்டாக செயல்பட்டுவரும் திரு. முரளி என்பவர் FC செய்வதற்கு வாகனத்தை ஆஜர்படுத்தாமலேயே போலியாக வேறு ஒரு வாகனத்தில் FC செய்வதற்கான வாகனத்தின் எண்ணை பெயின்ட் செய்து வாகனத்தை ஆய்விற்கு உட்படுத்தியதாக ஆவணங்களை ஏற்படுத்தியும், அதற்காக

மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. பாமாபிரியா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து FC செய்கிறார்கள் என்ற இரகசிய தகவலின்பேரில் **25.11.2024** ஆம் தேதி FC பார்க்கப்பட்ட TN 52 B 4474 (8 பக்கம் கொண்ட கோப்பு) மற்றும் TN 52 J 2344 (8 பக்கம் கொண்ட கோப்பு) ஆகிய வாகனங்களுக்கான Form C.F.R.A அசல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வட்டாரப் போக்குவரத்து அலுவலர், திருச்செங்கோடு அவர்களின் செயல்முறை ஆணை செ.மு.ஆணை **எண்.25149/இ3/2024** நாள்: **18.11.2024–படி கொடிநாள் வசூல் இலக்கு** திருமதி.கு.பாமாபிரியா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–**1,** திருச்செங்கோடு அவர்களுக்கு **45,000/–** வில்லைகளும், திரு.கா.சக்திவேல், கண்காணிப்பாளர், திருச்செங்கோடு அவர்களுக்கு **40,000/–** வில்லைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருமதி.பாமாபிரியா அவர்கள் **9000** வில்லைகள் ரூ.**5** வீதம் ரூ.**45,000/–**க்கும், திரு.கா.சக்திவேல் அவர்கள் **8000** வில்லைகள் **40,000/–**க்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் Consolidated Account Statement பக்கம் **1** முதல் **4** முடிய வட்டார போக்குவரத்து அலுவலரால் சான்று செய்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் Department of Transport, Tamil Nadu, Transaction Summary, Report for the period from 25.11.2024 to 25.11.2024-ஆம் தேதி இரவு **10.25** மணி முடிய உள்ளது பக்கம் **1** முதல் **4** முடியவும், Advance Number Statement dated: 25.11.2024-ஆம் தேதி முடிய உள்ளது பக்கம் **1** மற்றும் **2** முடிய உள்ளது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோரை அழைத்துக் கொண்டு அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்திற்கு சென்று சோதனை செய்ததில் அங்கு பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. இந்த திடீர் சோதனையானது **26.11.2024–** ஆம் தேதி காலை **10.30** மணிக்கு முடிக்கப்பட்டது.

**மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்த தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களால் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் இடைத்தரகர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்துகொடுப்பதற்காக அவை முறையற்ற முறையில் அலுவலர்களால் அவர்களிடமிருந்து பிரதிபலானாக பெறப்பட்ட**

பணமாக இருக்கக் கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும் தனியர்கள் / இடைத்தரகர்கள், முறையற்ற விதத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள் அவர்களது அலுவல் பணியில் தனியர்கள் / இடைத்தரகர்களுக்கு பிரதிபலனாகவோ, சட்ட விரோதமான வழிகளிலிலோ பணி செய்வதற்கு அவர்களைத் தூண்டுவதற்கு அலுவலகத்திற்கு கையூட்டு பணத்துடன் வந்து இருக்கக் கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இன்று 27.11.2024-ஆம் தேதி காலை 10.30 மணிக்கு மேற்படி எதிரிகள் 1) திரு.S.சரவணன், த/பெ.சுப்பிரமணியம், வட்டார போக்குவரத்து அலுவலர் (செயலாக்கம்), ஈரோடு சரகம், வட்டார போக்குவரத்து அலுவலர், திருச்செங்கோடு (முழுக் கூடுதல் பொறுப்பு), நாமக்கல் மாவட்டம் மற்றும் 9 நபர்கள் மீதும் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 7/AC/2024, u/s. 7(a), 7-A of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

27/11/24.

(மு. சுபாஷிணி)
துணைக் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.